Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.57 /2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.59/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பாலசுப்பிரமணியம் | தொழில் | கோயில் அர்ச்சகர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23 day of May 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** ( எதிரி அப்சல் என்கிற ராகி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கோயில் அர்ச்சகராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 24.09.2020 அன்று கோட்டை ஈஸ்வரன் கோயிலில் நான் அர்ச்சகராக பணியில் இருந்து மதியம் பூஜையை முடித்துவிட்டு மதியம் 1.30 மணியளவில் கோவிலை விட்டு வெளியே வந்துவிட்டேன். அப்பொழுது, கோவிலுக்கு பின்புறம் சத்தம் கேட்டது, நான் சென்று பார்த்தேன். அப்பொழுது இவ்வழக்கின் எதிரி அப்சல் கோவிலில் உண்டியலை உடைத்துக்கொண்டு இருந்தார். எந்த ஒரு பொருளும் திருடு போகவில்லை. அவரை பிடித்து பின்பு அந்த கோவிலில் எழுத்தராக பணிபுரியும், செல்வராஜ் என்பவரிடம் ஒப்படைத்தேன். நான் பிடித்து ஒப்படைத்த நபரை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியாது. பின்பு நாங்கள் பிடித்த நபரை காவல் நிலையத்திற்கு அழைத்துவந்து போலிசாரிடம் ஒப்படைத்தோம். பின்பு இது தொடர்பாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் போலிசாரிடம் நான் கொடுத்ததாகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

கோவிலில் மொத்தம் இரண்டு பூசாரிகள் உள்ளோம். இருவரும் மாறிமாறி பணி செய்வோம். நான் கோவிலை மூடிவிட்டு சென்றபோது சத்தம் கேட்டு மீண்டும் வந்து பார்த்தேன். கோயிலை சுற்றி சுமார் 12 அடி மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான். நான் எதிரியை கோவில் உள்ளே வைத்து

பூட்டினேனா என்றால் இல்லை. உடைந்த பூட்டை போலிசிடம் ஒப்படைத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. பூட்டு உடைந்திருந்ததா என்றால் உடைக்கும் சத்தம் கேட்டது. நான் கோயிலுக்கு வெளியே இருந்ததால் அந்த சத்தம் எங்கு இருந்து வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வேறு எந்த பூட்டும் உடையவில்லை என்றால் சரிதான். கோயிலை சுற்றி நிறைய முஸ்லீம் பள்ளிகள் மற்றும் முஸ்லிம் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கோவில் மதில் சுவற்றில் உள்ள புறாக்களை முஸ்லீம் பிள்ளைகள் வேட்டையாடுவதாக நீண்டகாலமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளானது கொரோனா காலம் என்றால் சரிதான். அந்த நேரத்திலும், முஸ்லீம் பிள்ளைகள் கோயிலில் இருந்த புறாக்களை வேட்டையாட வந்ததால் பிரச்சனை ஏற்பட்டுவிடும் என்பதற்காக அதை தவிர்க்கவேண்டி இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கொரோனா காலம் என்பதால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் கோவில் திறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரை போலிசார் டைப் செய்து வைத்திருந்தார்கள் என்றும், அதில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.57 /2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.59/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சொக்கலிங்கம் | தொழில் | கோயில் எழுத்தர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23 day of May 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** ( எதிரி அப்சல் என்கிற ராகி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கோயில் எழுத்தராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். கடந்த 24.09.2020 மதியம் 02.00 மணியளவில் நான் தர்மராஜா கோவிலில் உள்ள செயல் அலுவலகத்தில் இருந்தபோது அ.சா.1 எனக்கு போன் மூலம் கோட்டை பிரம்மேஸ்வரர் கோவிலில் சத்தம் கேட்பதாக எனக்கு தகவல் கூறினார். உடனடியாக அக்கேயிலுக்கு நான் சென்றேன். நான் சென்று பார்த்தபோது அங்கு பொதுமக்கள் மற்றும் அ,சா.1 அங்கு இருந்தார்கள். கோவிலுக்கு பின்புறம் சென்று பார்த்தபோது அம்மன் சன்னதி அருகே வெளியே வைக்கப்பட்டு இருந்த உண்டியலை ஒரு முஸ்லிம் நபர் உடைக்க முயற்சி செய்துக்கொண்டு இருந்தார். எங்களை பார்த்த உடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் பிடித்தோம். அவ்வாறு பிடித்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ( எதிரி மனுவில் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை , எதிரியை அடையாளம் காட்டுவதில் எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்தார். ) மேற்படி சம்பவத்தினால் கோவிலில் உள்ள பொருட்கள் ஏதுவும் திருடு போகவில்லை. பூட்டு மட்டும் உடைக்கப்பட்டு இருந்தது. பின்பு நாங்கள் பிடித்த அந்த நபரை நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

கோவிலில் ஒரு பூசாரி தான் உள்ளார். கோயிலில் மொத்தம் 3 உண்டியல் உள்ளது. நான் நிறந்தர எழுத்தாளராக கோவிலில் பணிசெய்து வருகிறேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளானது கொரோனா காலம்

என்றால் சரிதான். அந்த சமயத்தில் மக்கள் யாரையும் அனுமதிக்கவில்லை, சாமிக்கு செய்யும் பூஜை மட்டும் நடைப்பெற்றது. அ.சா.1 ற்கு கோயில் பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் சத்தம் கேட்டதாக தகவல் தெரிவித்துள்ளார்கள். அ.சா.1 எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். நானும் , அ.சா.1 னும் சம்பவ இடத்திற்கு 20 நிமிடத்தில் சென்றுவிட்டோம். இது தொடர்பாக நான் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். அவர்கள் வந்து எதிரியை அழைத்து சென்றுவிட்டார்கள்.கோவில் பின் பகுதியில் உள்ள அம்மன் சன்னதியிடம் சத்தம் கேட்டதாக நாங்கள் சென்று பார்த்தோம். உடைந்த பூட்டை போலிசிடம் ஒப்படைத்தோமா என்று எனக்கு நினைவில் இல்லை. கோவிலை சுற்றி முஸ்லிம் வீடுகள் மற்றும் பள்ளிகள் உள்ளது என்றால் சரிதான். கோவில் மதில் சுவற்றில் உள்ள புறாக்களை முஸ்லீம் பிள்ளைகள் வேட்டையாடுவதாக நீண்டகாலமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான், அது வெளிபுறம் உள்ள ராஜ கோபுரத்தில் அவ்வாறு செய்வார்கள். நானும் அ.சா.1 ம் காவல் நிலையத்திற்கு சென்று கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். அந்த நேரத்திலும், முஸ்லீம் பிள்ளைகள் கோயிலில் இருந்த புறாக்களை வேட்டையாட வந்ததால் பிரச்சனை ஏற்பட்டுவிடும் என்பதற்காக அதை தவிர்க்கவேண்டி இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO. 57/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.59/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரிஷ்வான் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | தன்வேல் | தொழில் | துணிக்கடை |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 19 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23 day of May 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-** (எதிரி அப்சல் என்கிற ராகி மனுவின் பேரில் ஆஜர் இல்லை)

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் துணிக்கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2020ம் ஆண்டு தேதி, மாதம் நினைவில் இல்லை. மதியம் 01.30 மணியளவில் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள எனது வீட்டில் நான் இருந்தேன். அப்பொழுது கோவில் அருகே சண்டை நடந்தது, யார் யாருக்கு சண்டை நடந்தது என்று எனக்கு தெரியாது. சிறிது நேரத்தில் போலிசார் அங்கு வந்து விசாரணை செய்து, என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னிடம் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

என் முன்னிலையில் கோயிலில் உண்டையலை உடைத்த நபரை பிடித்து போலிசாரிடம் ஒப்படைத்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. இவ்வழக்கின் எதிரி இஸ்லாமியர் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.- இல்லை.**

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness